**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – பாடம் 13*

## *உபத்திரவம் – 07*

## *சபை உபத்திரவத்திற்குள் கடந்து செல்லுமா? (02)*

### *சபையும் இஸ்ரேலும்:*

*இதுவரை கற்ற பாடங்களில் இருந்து, இவை இரண்டிற்கும் வெவ்வேறான அடையாளங்களும் மேலும் இயற்கையில் மிகுந்த தனித்துவங்களையும் கொண்டதை நாம் கண்டோம்.*

*சபையும் இஸ்ரவேலும் ஒன்றாக இருந்தால் உபத்திரவமும் இரகசிய வருகையும் நடைபெற முடியாமற் போகும்! ஏனென்றால் அனைவரும் மேலே எடுத்துக்கொள்ளப்பட்டால் பின்னர் யார் தான் உபத்திரவத்திற்குள் அல்லது 1,000 ஆண்டுகள் ஆட்சியில் இருப்பார்கள்?*

### *சபை என்றால் என்ன?*

*இஸ்ரவேலை சபை உள்ளடக்காது. 'சபை' என்ற வார்த்தை எல்லா வயது பரிசுத்தவான்களை உள்ளடக்குமானால், பிறகு நாம் அனைவரும் உபத்திரவத்திற்குள் செல்ல வேண்டும்.*

*ஏன்?*

ஏனென்றால் இஸ்ரவேல் உபத்திரவத்திற்குள் செல்ல போகிறது.

இதையே யாக்கோபின் இக்கட்டுக்காலம் என்று வேதவசனம் எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் தேவன் வெளிப்படுத்தியுள்ளார் .

சபையும் இஸ்ரவேலும் ஒன்றென்றால் உபத்திரவத்திற்கு முன் இரகசிய வருகை என்ற ஒன்று இருந்திருக்காது.

சபை மனுஷராலான ஒரு சிறப்புக்குழு. சபை என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரைப்பின்பற்றும் எல்லோரையும் குறிக்கும் இதில் விசுவாசிக்கின்ற இஸ்ரவேலரும் அடக்கம். இதை இஸ்ரவேல் தேசத்தோடு குழப்பிக்கொள்ள கூடாது. சபை மனுஷராலான ஒரு சிறப்புக்குழு என்பதால் அதனுடைய தொடக்கமும் அதே போல முடிவும் இந்த பூமியிலேயே அமையும்.

எக்லீசியா (ekklisia) என்ற வார்த்தையின் பொருள் தான் சபை. இது உண்மையில் 'எக்லிடோ' (ekoleto) என்ற வார்த்தையில் இருந்து வருகிறது. இதன் பொருள் அழைக்கப்பட்டவர்கள் அல்லது ஒருமுறை அழைக்கப்பட்டவர்கள். இதற்கு புதிய ஏற்பாட்டில் நான்கு அர்த்தங்கள் உள்ளன.

## 1. மக்கள் கூட்டம்

**அப்போஸ்தலர் 19:39,** நீங்கள் வேறே யாதொரு காரியத்தைக்குறித்து விசாரிக்கவேண்டியதானால், அது நியாயசங்கத்திலே தீர்க்கப்படும்.

எபிரெயர் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளது போல இதை மக்கள் ஆராதனை செய்வதற்காக கூடிவருவதை குறிப்பதற்காகவும்

*பயன்படுத்தலாம். அப்போஸ்தலர் 7 ஆம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி ஒரு கூட்டமான மக்களாக எகிப்திலிருந்து அழைக்கப்பட்டவர்கள் என்று இஸ்ரவேலை சொல்ல பயன்படுத்தலாம்.*

## *2. உள்ளூர் பகுதிகளில் உள்ள கிறித்தவர் கூடுதல்*

***அப்போஸ்தலர் 8:1-3,*** *[1]அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள். [2]தேவ பக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங்கொண்டாடினார்கள். [3]சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்.*

*எருசலேமில் உள்ள சபையின் மேல் மிகவும் பெரிய உபத்திரவம் வந்தது. அதனால் அங்குள்ள சபையானது ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட மக்கள் கூடிவருவதை குறிப்பிடுகின்றது.*

***அப்போஸ்தலர் 11:22 & 26,*** *[22]எருசலேமிலுள்ள சபையார் இந்தக் காரியங்களைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அந்தியோகியாவரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள்.*

*[26]அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல்முதல்*

*அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்ற பெயர் ஜனங்களால் அழைக்கப்பட்டது.*

*அதனால், குறிப்பிட்ட விசிவாசிகளின் கூடுதல் என்பதே இதன் பொருள்.*

### *3. எல்லா வெளிப்படை கிறிஸ்தவர்கள்.*

***அப்போஸ்தலர் 12:1,*** *அக்காலத்திலே ஏரோதுராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி;*

*இங்கே சபை என்ற வார்த்தை வெறும் கிறிஸ்த்தவம் என பொதுவாக அழைக்க பயன்படுத்தியுள்ளனர்.*

### *4. அழைக்கப்பட்ட யாராயினும்*

*சிலர் ஒன்றாக அழைக்கப்பட்டவர்களாக இணைவதை குறிக்கின்றது. தேவனால் அழைக்கப்பட்டு இணைந்து ஒரு கூட்டமாக வருவதை குறிக்கும். ஆனால் இதை உள்ளூரில் உள்ள சபையின் அமைப்பாக அல்லது பல அமைப்புகளாக அல்லது வெளிப்படையான சபையாக பயன் படுத்தப்படுகிறது. இது கிறிஸ்துவின் சரீரமாகும்.*

*யார் உண்மையில் மீட்கப்பட்டு, மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியால் அபிஷேகிக்கபட்டு சரீரத்தின் ஒரு அங்கமாக உள்ளவர்கள்.*

*புதிய ஏற்பாட்டில் இது மீட்கப்பட்ட பரிசுத்தவான்களே ஆகும்.*

## இஸ்ரவேலை வேதாகமத்தில் எவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்?

## 1. வரவழைக்கப்பட்ட குழுவினர்

எகிப்திலிருந்து ஒரு முறை மட்டும் வரவழைக்கப்பட்ட ஒரு மக்கள் குழுவையே இஸ்ரவேலர்கள் என்பார்கள். இதை கிறிஸ்துவோடோ அல்லது சபையோடோ தொடர்பு படுத்துவதற்கான எந்த ஒரு குறிப்பும் இல்லை. இதை அழைக்கப்பட்ட குழுவினரையோ அல்லது ஆயத்தமான மக்களையோ அல்லது மக்களின் அமைப்பையோ குறிக்க பயன்படுத்தவில்லை.

இஸ்ரவேலை பரிசுத்தவான்களின் கூட்டம் என சொல்வதற்காக சபை என்ற வார்த்தையை ஒருபோதும் பயன்படுத்தப்படவில்லை. இது ஒரு முழு தேசத்தையும் அழைக்கப்பட்டதற்கான வார்த்தையை குறிக்க மட்டுமே பயன்படுத்துகிறது. இதற்கு பரிசுத்தவான்களாக இருக்கும் சிலரோடும் அல்லது அவ்வாறு இல்லாமல் இருக்கும் சிலரோடும் எந்த ஒரு தொடர்பும் கிடையாது.

சபை இஸ்ரவேலை சேர்க்காது. சபை சில யூதர்களை, மீதமுள்ள விசுவாசிக்கும் யூதர்களை மட்டும் உள்ளடக்கும்.

ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு தேவனின் பரிசுத்தவான்கள். அவர்கள் தேவனுடைய உடலாகிய சபையின் ஒரு அங்கம் அல்ல. சபை என்பது வேறு. சபை என்ற வார்த்தையானது தன்னுடைய தனித்துவத்தை இஸ்ரவேலின் குறிப்புக்காக குறிக்க பயன்படுத்தவில்லை.

ஆனால் மற்றொரு வகையில், இது நடப்பதற்கு முன்னரே இயேசு தன்னுடைய சபையை எடுத்துக்கொள்ள வந்தால், பின் நாம் அனையவரும் செய்ய வேண்டியது என்னவென்றால் நாம் அவருக்காக தயாராக இருக்கிறோமா என்று உறுதி

*செய்துகொள்ள வேண்டும். ஒரு சமயத்தில் இயேசுவை நாம் தேடுகிறோம் ஆனால் மற்றொரு சமையத்தில் அந்திகிறிஸ்துவை நாம் தேடுகிறோம். இது இப்போது சபைகளில் பெரியதொரு விவாதப் பொருளாகிவிட்டது. இது இறையியல் ஸ்பெக்ட்ரங்களில் (spectrum) தான் குறிப்பாக இவ்வாறு நடைபெறுகிறது என்றும் இந்த சபையில் இல்லை என்றும் நான் விசுவாசிக்கிறேன்.*

*2.* ***தேவனுடைய அன்பின் அடிப்படையில் ஒரு ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த தேசமாகவும் இருக்க இஸ்ரவேல் தேர்ந்தெடுக்கப்பட்டது.***

***யாத்திராகமம் 19:6,*** *நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்.*

*அதனால், அவர்கள் தேவனின் பிரதிநிதியாக தேசங்களுக்கும் மேலும் புறஜாதியார்களின் பிரதிநிதியாக தேவன் முன்னும் நிற்கலாம்.*

***3. தேவன் தன்னுடைய வெளிப்பாட்டை வாங்கிக்கொள்ளவும் பதிவு செய்யவும் இஸ்ரவேலையே தேர்ந்தெடுத்தார்***

***உபாகமம் 4:5-8,*** *[5]நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி பிரவேசிக்கும் தேசத்திலே நீங்கள் கைக்கொள்ளும்பொருட்டு,*

*என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன். [6]ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்குமுன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள். [7]நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? [8]இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?*

***ரோமர் 3:1-2,*** *[1]இப்படியானால், யூதனுடைய மேன்மை என்ன? விருத்தசேதனத்தினாலே பிரயோஜனம் என்ன? [2]அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது; தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே.*

*தேவன் நியாயப்பிரமாணத்தை அவர்களிடம் கொடுத்தார். அவர்கள் அதை எழுதி அடுத்த சந்ததிக்கு கடத்துவது அவசியமாய் இருந்தது.*

## 4. மேசியா இஸ்ரவேலின் வம்சத்தில் வரவேண்டும்

***ரோமர் 9:5,*** *பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும்மேலான தேவன். ஆமென்.*

***எபிரெயர் 7:13-14,*** *[13]இவைகள் எவரைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ, அவர் வேறொரு கோத்திரத்துக்குள்ளானவராயிருக்கிறாரே; அந்தக் கோத்திரத்தில் ஒருவனாகிலும் பலிபீடத்து ஊழியம் செய்ததில்லையே. [14]நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக்குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே.*

*அதனால், அவர்கள் தான் தங்களுடைய பரம்பரையில் மேசியாவை கொண்டுவரவேண்டும்.*

## ***சபையும் இஸ்ரவேலும் வேறுபட்டவைகள்***

*அப்போஸ்தலர் புத்தகத்தில், இஸ்ரவேலும் சபையும் ஒருமித்து இருந்தன. இஸ்ரவேல் என்ற எழுத்து இருபது முறையும் எக்லீசியா (ekklesia) (சபை) என்ற எழுத்து பத்தொன்பது முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் இந்த இரண்டு குழுவும் வேறுபடுத்தியே வைக்கப்பட்டது.*

*இதனால், இஸ்ரவேல் என்பது சபையே தான் என்று கூறுவது தவறு. வேதத்தின் அடிப்படையில் கூறுவதற்கு மாற்று இறையியல் அறிஞர்களிடம் (replacement theologian) எந்தவொரு கூற்றும் இல்லை.*

*சபையும் இஸ்ரவேலும் வெவ்வேறானவ. அதனால் சபையானது உபத்திரவத்திற்கு முன் எடுத்துக்கொள்ளப்படும். மேலும் இஸ்ரவேல் இன்னும் மீட்கப்படுவதற்காக இருக்கும்.*

*இயேசு இதை மிகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.*

***மத்தேயு* *16:18,* மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாயிருக்கிறாய், இந்தக்கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.*

***Matthew 16:18**, And I also say to you that you are Peter, and on this rock I will build My church, and the gates of Hades shall not prevail against it.*

*இயேசு இங்கு முதன்முறையாக சபை பற்றி மிகத்தெளிவாக மேற்கோள் காட்டுகிறார். இயேசு "நான் என் சபையைக்கட்டுவேன்" என்று கூறுவதை கவனியுங்கள்.*

*"I will (கட்டுவேன்)" என்பது எதிர்காலத்தை குறிக்கிறது.*

*இயேசு "என் சபை" என்று கூறுகிறார். இந்த கூற்றுக்கு நீண்ட காலத்திற்கு முன்னரே இஸ்ரவேல் உள்ளது.*

*இரண்டாவது "பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை"*

*அற்புதமான வாக்குத்தத்தம். இது மிகவும் முக்கியமான வாக்குதத்தமும் கூட.*

*உபவத்திரத்திற்கு இடையில் உள்ள ஒரு வசனத்தை நாம் பார்க்கலாம்.*

***வெளி* *13:7,* மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது.*

இங்கே இந்த மிருகம் பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயித்தது.

அதனால், இது நிச்சயமாக சபை அல்ல ஏனெனில் இயேசு மிகவும் தெளிவாக பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்று கூறியுள்ளார்.

அந்திகிறிஸ்து இந்த முழு உலகையும் ஆட்சி செய்வான். அதனால் கிறிஸ்துவின் உண்மையான சபை அவனுடைய ஆட்சிக்குள் செல்ல இங்கு இருக்காது.

## சபைக்கு ஆதியும் அந்தமும் உண்டு:

அப்போஸ்தலர் 2இல், பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் 120 மக்களின் மீது ஊற்றப்பட்டு சபையானது பிறந்தது. மேலும் அதே நாளில் 3,000 மக்கள் சேர்ந்து கொண்டனர். பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியு (Cornelius) வீட்டின் மீது ஊற்றப்பட்டதை கண்டபோது பேதுரு இதை உறுதி செய்தார்.

**அப்போஸ்தலர் 11:15,** நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள்மேலும் இறங்கினார்.

இஸ்ரவேல் பல ஆண்டுகளாக உள்ளது. ஆனால் சபையோ பெந்தெகொஸ்தே நாளில் தான் பிறந்தது.

பரிசுத்த ஆவியானவர் தான் உங்களை சபையோடு கூட்டிச்சேர்கிறார்.

**1 கொரிந்தியர் 12:13,** நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே

ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.

பரிசுத்த ஆவியானவர் ஞானஸ்நானம் கொடுத்து இந்த உடலோடு சேர்க்கிறார். ஆனாலும் இந்த மூன்று விதமான கூட்டங்களும் உள்ளது.

- யூதர்கள்
- புறஜாதியினர்
- சபை

சபையானது இரகசிய வருகையின் போது சபை முடிவுக்கு வந்துவிடும். சபையாகிய நாம் இப்போது இதன் இடைப்பட்ட காலத்தில் உள்ளோம்.

தேவன் இஸ்ரவேலோடு தம்முடைய திட்டத்தை ஆரம்பித்தார். இஸ்ரவேல் அவரை நிராகரித்தது. அவர் புறஜாதியினரிடம் (சபை என்று அழைக்கப்பட்ட கூட்டம்) சென்றார். புறஜாதியினர் முழுமை பெற்றவுடன் சபையாகிய நாம் சென்றுவிடுவோம் (சபையின் இரகசிய வருகை). தேவன் மீண்டுமாய் இஸ்ரவேலோடு கையாள அங்கேயே திரும்பிச் செல்கிறார். இஸ்ரவேலை முழுமையாக தேவன் நிராகரிக்கவில்லை.

## பரிசுத்த ஆவியானவரின் வாசமாயிருப்பது திருச்சபைக்கு தனிப்பட்டதாக உள்ளது:

தேவனோடு அத்தகைய உறவுகொள்ள முடியும் என்று எந்தவொரு யூதனும் எப்போதும் சிந்தித்திருக்க முடியாது. அவர்கள் தேவனுடைய பிரசனத்திற்குள் செல்ல

*அஞ்சுவார்கள். இந்த தனித்துவத்தை தான் தேவன் சபைக்கு தன்னுடைய பரிசுத்த ஆவியானவர் மூலமாய் நமக்கு வழங்கியுள்ளார்.*

***கொலோசெயர் 1:26-27,*** *[26] உங்கள்பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். [27] புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.*

*தேவனின் மகிமையான இயேசு உங்களுள் இருக்கிறார். மகிமை என்பது வெளிப்படுத்தப்பட்ட தேவ பிரசன்னம்.*

***ரோமர் 11:17-24***

*வ 17, காட்டொலிவமரமாகிய புறஜாதியாராகிய (சபை) நாம், ஒட்டவைக்கப்பட்டுள்ளோம். ஏனெனில் தேவன் இஸ்ரவேலராகிய சுபாவக்கிளைகளில் சிலவற்றை முறித்துப் போட்டுவிட்டார்.*

*வ 20, அவர்களுடைய அவ்விசுவாசத்தினால் அவர்கள் முறித்துப்போடப்பட்டார்கள்.*

*வ 24, ஒட்டவைக்கப்பட்ட கிளைகளை (சபை) வெட்டிய பின் சுபாவக்கிளைகளை மீண்டும் ஒட்டவைக்கப்படும்.*

*இஸ்ரவேலுக்கும் சபைக்குமான இரண்டு தெளிவான தனித்துவ அடையாளத்தை நீங்கள் இங்கு காணலாம்.*

*சபை தேவனோடு ஒட்டவைக்கப்பட்டு ஒரு ஆசிர்வாதமாய் அங்கு இருந்தது. சபையை தேவன் எடுத்துக்கொள்ளும் காலம் வரும். அதுதான் இரகசிய வருகை. இஸ்ரவேல் உபத்திர காலத்திலேயே மீண்டுமாய் அதோடு ஒட்டப்பட்டும். இதனால் இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வரும்.*

*வ 25, சகோதரரே, இந்த இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன் என்று பவுல் கூறுகிறார்.*

*புறஜாதியார் முழுமை பெற்றுவிட்டால், பிறகு சுபாவக்கிளைகளாகிய இஸ்ரவேல், மீண்டுமாய் ஒட்டப்பட்டும். இது தான் அந்த இரகசியம். இது பழைய ஏற்பாட்டில் உள்ளவர்களுக்கு வெளிபடுத்தப்படவில்லை.*

*பிறகு வ26இல் கூறப்பட்டுள்ளது போல அனைத்து இஸ்ரவேலும் இரட்சிக்கப்படும்.*

*அதனால், சபையானது பெந்தெகொஸ்தே நாளில் துவங்கி இரகசிய வருகையின் போது முடிவடைகிறது. மேலும் இஸ்ரவேல் மீண்டும் ஒட்டிக்கொள்ளப்படும்.*

*நினைவுள்ளதா இரகசிய வருகையின் பாடத்தின்போது, யோவான் 14இல் இயேசு தன் சீஷர்களிடம், தான் சென்று ஒரு இடத்தை ஆயத்தம் செய்யப்போவதாக கூறினார். அவர் மீண்டும் வந்து தன்னுடைய சபையை தன் தகப்பனின் வீட்டிற்கு எடுத்துச் செல்வார். <u>எந்த ஒரு சூழ்நிலையிலும் தேவன் மீண்டும் வந்து இஸ்ரவேலை தன்னுடன் எடுத்துச் செல்லப்போவதாக அவர்களுக்கு வாக்குத்தத்தம் அளிக்கவில்லை</u>.*

***1 தெசலோனிக்கேயர் 5:9,** தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்,

அதனால், உபத்திரவத்திற்கு முன், பிரிமில்லேனியல் (premillennial) சபை நாம் என மிகுந்த உறுதியுடன் கூறிக்கொள்ளலாம்.